இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 16-10-2025

# த.வெ.க. கொல்லும்! நீதி வெல்லும்!

41 உயிர்களைக் கொன்ற விஜய் பனையூரில் பதுங்கிக் கொண்டு, 'நீதி வெல்லும்' என்று டுவிட்டர் போடுகிறார். த.வெ.க. கொல்லும்! ஆனால் நீதி வெல்லும்!

மீட்டிங் என்ற பெயரால் சூட்டிங் நடத்தி விட்டு, சினிமாவில் 'சும்மா' கொல்வதைப் போல, நிஜத்தில் கொன்று விட்டு, லைட்டைப் போட்டு ஆப் செய்து விளையாடும் சேட்டிஸ் மனிதனின் விளம்பரப் பசிக்கு 41 உயிர்களா?

**சொன்ன நேரத்துக்கு வரத் தெரியவில்லை. காக்க வைத்து காக்க வைத்து, சோறு தண்ணீரைத் தராமல் உடல் வாதையை ஏற்றிவிட்டு, மூச்சுத் திணற வைத்து, செத்து விழுபவர்களைப் பார்த்த பிறகும் மேடையில் பாட்டுப் பாடிக் கொண்டிருக்க கொடூரமான வில்லனாலும் முடியாது. அதை ரசிக்கும் ஒருவரால்தான் முடியும்.**

அவர் கேட்டதை விட, பெரிய இடத்தை காவல் துறை தந்தது. அந்த இடத்தை முறையாகப் பயன்படுத்தி இருக்க வேண்டும். பொதுவாக, 'பெரிய இடம் கேட்டோம், சின்ன இடம் தந்தார்கள்' என்றுதான் காவல் துறை மீது புகார் சொல்லப்படும். ஆனால் விஜய் விஷயத்தில், 'சின்ன இடம் கேட்கிறார்கள், பெரிய இடம் கொடுத்துள்ளோம்' என்பதுதான் பதிலாக அமைந்துள்ளது.

பொதுவாக கூட்டம் அதிகமாகி விட்டது என்றால் சொன்ன நேரத்துக்கு முன்னதாகவே தலைவர்கள் வந்துவிடுவார்கள். அதுதான் வழக்கம். ஆனால் விஜய், கூட்டம் நெரிசலாகி, மூச்சு முட்டி, சாகும் வரை பஸ்ஸுக்குள் காத்திருக்கிறார். கருவூருக்கு வந்தவர், சாவூர் வரும் வரை ஊருக்கு வெளியில் பதுங்கி இருக்கிறார். மூச்சு முட்டத் தொடங்கி விட்டது என்றதும் லைட்டை ஆப் செய்து விட்டு, நுழைகிறார். இருட்டு பஸ்ஸைப் பார்த்து மிரள்கிறார்கள் ரசிகர்கள்.

**தண்ணீர் கேட்ட ஒருவருக்கு விஜய், தண்ணீர் பாட்டிலை தூக்கிப் போடுகிறார். கூட்டத்தில் எதையும் தூக்கிப் போடக் கூடாது என்பது சாதாரணமான லாஜிக். ஹீரோ தூக்கிப் போட்டால் கூட்டமே அதைப் பிடிக்கும். இது நல்ல 'ஷாட்' ஆக இருக்கலாம். ஆனால் 'ஷாக்' ஆனது மக்கள்தான். கூட்டத்தின் போக்குக்கு ஏற்ப மக்கள் விழத் தொடங்கியது அதன் பிறகுதான். மிதிபட்டது அதன் பிறகுதான். இது எதையும் கண்டு கொள்ளாமல், கரூரில் இருந்து தப்பினார் விஜய்.**

சம்பவம் நடந்தது செப்டம்பர் 27. இன்று அக்டோபர் 14. அதாவது பதினாறு நாட்களாக வெளியே வரவில்லை. அவரது கட்சியின் முக்கிய நிர்வாகிகள், முக்காத நிர்வாகிகள் அனைவரும் தலைமறைவு ஆனார்கள். ஆனால் இன்று விஜய் கட்சி நிர்வாகி என்ன சொல்கிறார் என்றால், 'போலீஸ்தான் எங்களை ஊரை விட்டுப் போகச் சொன்னார்கள்' என்று. மூன்று நாள் கழித்து வீடியோ வெளியிட்ட விஜய் இதை ஏன் சொல்லவில்லை. 'நான் திரும்ப அங்கே போனால் அதைக் காரணம் காட்டி பதற்றமான நிலையில் அங்கு வேறு சில அசம்பாவிதங்கள் எதுவும் நடந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் நான் அங்கு மீண்டும் செல்லவில்லை' என்று வீடியோவில் சொன்னது விஜய். ஆனால், 'போலீஸ் சொன்னதால் வந்தோம்' என்று இன்று பொய் சொல்கிறது அவரது த.வெ.க. காவல் துறை போகச் சொல்லி இருந்தால், அதையே பெரிய பிரச்சினை ஆக்கி இருக்க மாட்டார்களா?

உயர்நீதிமன்றத்திலும் உச்சநீதிமன்றத்திலும் தாக்கல் செய்த வழக்குகளில்தான் எத்தனை தில்லுமுல்லுகள். தகிடுதத்தங்கள். பிராடுத்தனங்கள். அந்தக் கட்சியையே தமிழக பிராடுகள் கட்சி என்று சொல்லும் அளவுக்கு அத்தனை பிராடுகளை அரங்கேற்றினார்கள்.

**41 பேர் இறந்த வழக்கை சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்று வழக்கு போடுகிறார் பன்னீர்செல்வம் என்பவர். 'என் மகனைப் பறி கொடுத்துவிட்டேன்' என்று இவர் சொல்கிறார். இவர் தனது மகனை பரிதவிக்க விட்டு விட்டுப் போய் பல ஆண்டுகள் ஆகிவிட்டது என்று பன்னீர்செல்வத்தின் மனைவி சர்மிளா பேட்டி தருகிறார். 'அவர் கேஸ் போட்டதே எனக்குத் தெரியாது. என் பையனுக்கு ஒண்ணே கால் வயசு இருக்கும் போதே விட்டுட்டு போயிட்டாரு. பணத்துக்காக இவ்வளவு கேவலமான வழக்கு போட்டுள்ளாரு. பையன் இறந்ததுக்கு ஐந்து நிமிசம்தான் இருந்தாரு. எட்டு வருஷமா அவர் பையனை பார்த்ததே இல்லை' என்கிறார் சர்மிளா.**

**கரூர் சம்பவத்தில் தனது மனைவி சந்திராவை இழந்தவர் செல்வராஜ். அவர் பெயரில் உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கு போடப்பட்டுள்ளது. இந்த தகவல் வெளியானதும், செல்வராஜ் அதிர்ச்சி அடைந்தார். 'நான் எந்த வழக்கையும் தாக்கல் செய்யவில்லை' என்கிறார். இந்த செல்வராஜை அ.தி.மு.க. பிரமுகர் ஒருவர் ஏமாற்றி கையெழுத்து வாங்கி இருக்கிறார். 'அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் பாலகிருஷ்ணன் என்பவர் மூலம் என்னை ஏமாற்றி போலியாக கையெழுத்து பெற்று விட்டார்கள். வேலை வாங்கித் தருவதாகச் சொன்னதால்தான் கையெழுத்து போட்டேன்' என்கிறார் செல்வராஜ். இதனை உச்சநீதிமன்றத்திலேயே சொல்லி இருக்கிறார் செல்வராஜ். 'இது குறித்து நாங்கள் விசாரிப்போம்' என்று சொல்லி இருக்கிறார்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள்.**

**கரூர் மரணத்தை சி.பி.ஐ. விசாரிக்கட்டும் என்று சொல்லி இருக்கிறது உச்சநீதிமன்றம். "கரூர் துயரச்சம்பவம் தொடர்பாக உச்சநீதிமன்றம் பிறப்பித்திருப்பது இடைக்கால உத்தரவுதான். சி.பி.ஐ. விசாரணை கோரி மோசடியாக மனு தாக்கல் செய்திருப்பது உறுதி செய்யப்பட்டதும், முந்தைய உத்தரவு ரத்து செய்யப்படும்" என்று மூத்த வழக்கறிஞர் வில்சன் சொல்லி இருக்கிறார். அதற்குள் 'நீதி வெல்லும்' என்று அவசரப்படுகிறார் விஜய்.**

**கடந்த ஜூலை மாதம் திருப்புவனம் அஜித்குமார் இறந்தது தொடர்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பேசிய விஜய், 'எதற்காக சி.பி.ஐ. பின்னால் ஒளிகிறீர்கள்? சி.பி.ஐ. என்பது ஆர்.எஸ்.எஸ். - பி.ஜே.பி.யின் கைப்பாவை' என்று சொன்னார். இன்று அவரே கைப்பாவையின் கைப்பாவையாக ஆகிவிட்டார். அவரது கட்சியே அவர்களால் உருவாக்கப்பட்டதுதானே?**

பா.ஜ.க.வை 'பாசிசம்' என்றும், 'நரேந்திர தாமோதர் தாஸ் மோடி அவர்களே' என்று விஜய் சொல்லி அழைத்த பிறகும் பா.ஜ.க.வுக்கு கோபம் வரவில்லை என்றால் அந்த ஸ்கிரிப்ட், 'பா.ஜ.க. ஸ்கிரிப்ட்' என்றுதானே அர்த்தம்?



சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம் (14.10.2025), கரூரில் 27.9.2025 அன்று கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்கள், கேரள மாநில முன்னாள் முதலமைச்சர் வி.எஸ். அச்சுதானந்தன், ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதலமைச்சர் சிபு சோரன், நாகாலாந்து மாநில ஆளுநர் இல.கணேசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் சுதாகர் ரெட்டி, தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர் மரு.பீலா வெங்கடேசன், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் டி.கே. அமுல் கந்தசாமி ஆகியோரது மறைவிற்கு இரங்கல் தீர்மானங்களும், சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்கள் மறைவிற்கு இரங்கல் குறிப்புகளும் நிறைவேற்றப்பட்டு, மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## டாஸ்மாக் வழக்கு: அமலாக்கத்துறையின் விசாரணை

# மாநில அரசின் கூட்டாட்சிக்கு எதிரானது இல்லையா?

### உச்சநீதிமன்றம் சரமாரியாக கேள்வி!

புதுடெல்லி, அக். 16 - டாஸ்மாக் வழக்கில் அமலாக்கத்துறை ஏன் தலையிட்டது, அமலாக்கத்துறையின் விசாரணை மாநில அரசின் கூட்டாட்சி உரிமைக்கு எதிரானது இல்லையா என்று உச்சநீதிமன்றம் சரமாரியாக கேள்விகளை எழுப்பியுள்ளது.



டாஸ்மாக் வழக்கு குறித்து அமலாக்கத்துறை விசாரணை நடத்த உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பான வழக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, மூத்த வழக்கறிஞர் கபில் சிபல், முகுல் ரோத்தகி ஆகியோர் தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜராகி வாதிட்டனர்.

டாஸ்மாக் வழக்கை மாநில அரசு விசாரணை நடத்திவரும் நிலையில் அமலாக்கத்துறை தலையிடும் அதிகாரமில்லை என்றும் கூட்டாட்சிக்கு எதிராக அமலாக்கத்துறை செயல்படுகிறது என்றும் கபில் சிபல் வாதிட்டார். அமலாக்கத்துறை வழக்கை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்றும் அவர் வாதத்தை முன் வைத்தார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், டாஸ்மாக் வழக்கை தமிழ்நாடு அரசு விசாரித்து வரும் நிலையில் அமலாக்கத்துறை ஏன் தலையிட்டது, இது மாநில அரசின் கூட்டாட்சி உரிமைக்கு எதிரானது இல்லையா, சட்டம் ஒழுங்கு யார் கட்டுப்பாட்டில் உள்ளது, அமலாக்கத்துறை மாநில வரம்புக்குள் ஏன் தலையிடுகிறது, மாநில அரசு உரிய விசாரணை நடத்தவில்லை என சந்தேகம் எழுந்தால் உடனடியாக அமலாக்கத்துறை அந்த வழக்குகளில் தலையிட்டு விசாரிக்குமா என்று அடுக்கடுக்காக பல்வேறு கேள்விகளை எழுப்பினர்.

தொடர்ந்து வாதிட்ட வழக்கறிஞர் முகுல் ரோத்தகி, அமலாக்கத்துறை விசாரணையின் போது, பெண்கள் உட்பட டாஸ்மாக் நிறுவன ஊழியர்கள் 40 மணி நேரம் சிறை பிடித்து வைக்கப்பட்டதாக சுட்டிக் காட்டினார்.

அமலாக்கத்துறையின் இந்த செயல் சட்ட மீறல் இல்லையா என்றும், அவர்களுடைய அலைபேசிகளை கைப்பற்றி தரவுகளை பதிவிறக்கம் செய்தது உரிமை மீறல் இல்லையா என்றும் வழக்கறிஞர் முகுல் ரோத்தகி பல்வேறு கேள்விகளை முன்வைத்தார்.

இதையடுத்து, அமலாக்கத்துறை விசாரணை நடத்தும் முறையை ஆறு ஆண்டுகளாக கவனித்து வருகிறோம் என்று தெரிவித்த நீதிபதிகள், வழக்கு விசாரணையை 2.30 மணிக்கு ஒத்திவைத்தனர்.

## சிவகங்கையில் ரூ.9 கோடியில்

# ஆவின் துறையில் 13,126 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் – மனோ தங்கராஜ் வழங்கினர்!

*சிவகங்கை, அக். 16 - சிவகங்கை தனியார் திருமண மண்டபத்தில் ஆவின் துறையின் சார்பில் ஆவின் முகவர்கள், விற்பனையாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி, 117 உறுப்பினர்களுக்கு ரூபாய் 1=02 மதிப்பீட்டில் மாடு வாங்கவும், பராமரித்தல், கடன். உதவி, 3107 உறுப்பினர்களுக்கு ரூபாய் 76=லட்சத்தில் சங்கங்கள் முலம் பால் உற்பத்தியாளர்களுக்கான ஊக்கத்தொகை, 56, ஆவின் பணியாளர்களுக்கு ரூபாய் 90 = லட்சத்தில் ஈட்டிய பண விடுப்பு பலன்கள், மொத்த பால் விற்பனைமுகவர்களுக்கான ஆணை, ரூபாய் 3 லட்சத்தில் பால் பரிசோதனை கருவிகள், 2 ஒன்றிய இளநிலை செயற்பொறியாளர்களுக்கான ஆணைகள் ஆக மொத்தம் 13,126 பயனாளிகளுக்கு ரூபாய் 8=98 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் திருமதி கா. பொற்கொடி தலைமையில் பால்பண்ணை மேலாளர் ஆணையர் ஜான் லூயிஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.*

*இதில் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், மனோ தங்கராஜ் ஆகியோர் 9838 ஆவின் உறுப்பினர்களுக்கு ரூபாய் 6.27 கோடி ஊக்கத் தொகை, 117 உறுப்பினர்களுக்கு ரூபாய் 1 கோடியே 2 லட்சம் மதிப்பிலான மாடுகள் வாங்குதல் மற்றும் பராமரிப்பு செலவுகளும், 3107 உறுப்பினர்களுக்கு ரூபாய் 76 லட்சத்தில் ஊக்கத் தொகை, இரண்டு புதிய ஆவின் சங்கம் பதிவும் 56 ஆவின் பணியாளர்களுக்கு ரூபாய் 90 லட்சம் ஈட்டிய விடுப்பு பணப்பலன்கள், மொத்த பால் விற்பனை முகவர்களுக்கான ஆணையும், ரூபாய் 3 லட்சத்தில் பால் பரிசோதனைக் கருவிகள், 2 ஒன்றிய இளநிலை, செயற்.பொறியாளர்களுக்கான ஆணைகள் ஆக மொத்தம் ரூபாய் 13,126 பயனாளிகளுக்கு ரூபாய் 8.98 லட்சம் மதிப்பிலான பல்வேறு நலத் திட்ட உதவிகளை அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், மனோ தங்கராஜ் ஆகியோர் வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.*

*இதில் புதிதாக ஐந்து ரூபாய் பத்து ரூபாய் மதிப்பிலான டோன்ட் மில்க், பிரிமியம் கோல்ட் பதப்படுத்தப்பட்ட பால் வகைகளை அறிமுகப்படுத்தினார்கள்.*

*இந்த நிகழ்ச்சியில் திருபுவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன் வாழ்த்திப் பேசினார்.*

*இந்த நிகழ்ச்சியில் மாவட்ட திட்ட அலுவலர் மருத்துவர் அரவிந்த், மகளிர் திட்ட அலுவலர் கவிதா ப்ரியா, கூட்டுறவு இணைப்பதிவாளர் ராஜேந்திர பிரசாத், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குனர் திருமதி உமா மகேஸ்வரி, பால்பண்ணை துணைப் பதிவாளர்கள் செல்வம், ஜெயபால், காரைக்குடி ஆவின் மேலாளர் ராஜசேகர் மற்றும் மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.முத்துகுமார், ஆவின் துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.*

*அதனைத் தொடர்ந்து சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சிவகங்கை ராமநாதபுரம் மாவட்ட ஆவின் மேலாளர்கள், அலுவலர்கள் முகவரி கலந்து கொண்ட கூட்டத்தில் பணியில் குறித்து மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் அமைச்சர் மனோ தங்கராஜ் ஆய்வு மேற்கொண்டார்.*

*இந்த கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.*



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (14.10.2025) அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் முன்னிலையில் தமிழ்நாட்டில் முதற்கட்டமாக, 2025 – 2026 நிதியாண்டில் 10 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் தானியங்கி ஓட்டுநர் தேர்வு மையங்கள் அமைத்தல் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை மற்றும் மாருதி சுசுகி இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், போக்குவரத்துத் துறை ஆணையர் இரா. கஜலட்சுமி, மாருதி சுசுகி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தருண் அகர்வால், ஆகியோர் உடனிருந்தனர்.